**இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை உள்ளூராட்சி நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடங்கலாக 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவு | ஆகக் குறைந்தது ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2019 ஒக்டோபர் 25 ஆந் திகதி இடம்பெற்ற 168 ஆவது கட்டுப்பாட்டு சபையின் பின்னர் 2021 யூன் 18 வரை | எதிர்காலத்தில் குறித்த காலப் பகுதிக்குள் கட்டுப்பாட்டுச் சபை கூட்டப்படும். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடம்பெற்று இருக்க வேண்டிய 24 கட்டுப்பாட்டுச் சபைகள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். |
| (ஆ) | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவு | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 5(1)(அ)(i) இன் படி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனத்தின் தலைவராக காணப்படுவதுடன் தலைவரினால் கட்டுப்பாட்டுச் சபையின் ஏனைய அங்கத்தவர்களை 7 நாட்களுக்கு முன்னர் அறிவித்து கட்டுப்பாட்டுச் சபை கூட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் நியமிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு சபையை கூட்டுவதற்கு தலைவரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் குறித்த காலப் பகுதிக்குள் கட்டுப்பாட்டுச் சபை கூட்டப்படும். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 13.1(ஆ) ஆம் பிரிவு | உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் விடயத்தில் ஒழுக்க கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது கட்டுப்பாட்டுச் சபைக்கு உரிய வேலையாக இருந்த போதிலும், நிதி மோசடியொன்று தொடர்பாக கட்டுப்பாட்டு சபையின் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நிறுவனத்தின் மேலதிக பெண் பணிப்பாளருக்கு எதிராக 4 வருடங்களில் இருந்து | கட்டுப்பாட்டுச் சபையின் கவனத்திற்குட்படாத சட்டரீதியற்ற தீர்மானங்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தி, கட்டுப்பாட்டுச் சபையின் கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 600,000 செலவிடப்பட்டு இடம்பெற்றுக் கொண்டிருந்த ஒழுக்காற்று விசாரணையொன்று கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி நிறுவனத்தின் பணிப்பாளரினால் மூடி வைக்கப்பட்டு அவரது பதவித் துறப்பை ஏற்றுக் கொண்டு பணிக்கொடையை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவன அதிகாரச் சட்டத்தின் 13.1(ஆ) ஆம் பிரிவு | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற உயர் டிப்ளோமா கற்கைநெறியை தொடர்கின்ற குழுவிற்கு 2018 திசெம்பர் 06 ஆந் திகதி இடம்பெற்ற சம்பவமொன்று தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அரச செயலாளரின் தலைவரைக் கொண்டுள்ள குழுவொனன்றினால் உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) தொடர்பாக பரிந்துரைகள் சில சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 09 ஆந் திகதி கூட்டப்பட்ட 165 ஆவது கட்டுப்பாட்டு சபையிலே அந்த பரிந்துரைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு நடைமுறைப்படுத்து வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய உதவி பெண் பணிப்பாளரினால் அந்த கட்டளையை பின்பற்றாததன் காரணமாக அமைச்சின் செயலாளரின் | கட்டுப்பாட்டுச் சபையின் கவனத்திற்குட்படாத சட்டரீதியற்ற தீர்மானங்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தி, கட்டுப்பாட்டுச் சபையின் கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிவுரையின் பிரகாரம் சம்பளம் வழங்குதல் இடைநிறுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதி பணிப்பாளரினால் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி உள்வாங்கப்படுதல் இரத்துச் செய்யப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு | நிறுவனத்தின் சாரதியொரு வருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்க விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளர் சாரதியுடன் தவறாக கூட்டிணைந்து எரிபொருள் கட்டளைகளின் ஊடாக நிதி மோசடியொன்றை மேற்கொண்டிருப்பதாக பரிசோதனை அறிக்கையின் ஒழுக்காற்று கட்டளைக்கான வழிகாட்டலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும் இது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 2017 நவம்பர் 21 ஆந் திகதி இடம்பெற்ற கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானத்தின் படி உரிய உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு பதவியுயர்வொன்று பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்கள் 2018 யூன் 01 ஆந் திகதியிலிருந்து | கட்டுப்பாட்டுச் சபையின் கவனத்திற்குட்படாத சட்டரீதியற்ற தீர்மானங்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தி, கட்டுப்பாட்டுச் சபையின் கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

நடைமுறைப்படுத்தப்படும் வகையில் நிறுவனத்தின் சேவையிலிருந்து பதவி துறந்திருந்ததுடன், அவருக்கு உரிய பணிக்கொடை தொகையை செலுத்தாததன் காரணமாக அவரால் தொழில் ஆணையாளருக்கு அது தொடர்பாக அறிக்கைப்படுத்தப்பட்டதன் விளைவாக அவருக்கு உரித்தான ரூபா 469,287 பணிக்கொடை தொகை உரிய தினத்தில் செலுத்தப்படாததன் காரணமாக ரூபா 117,322 தண்டப் பணமாக விதிக்கப்பட்டு முழுத் தொகையையும் செலுத்துமாறு கட்டளையிடப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி அந்த தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் தண்டப்பணத்தை பொறுப்பு வாய்ந்த நபரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் நிறுவனத்தின் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,688,580 பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 953,590 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,752,990 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அரச பங்களிப்பு ரூபா 22 மில்லியனால் குறைவடைதல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்குப் பகுப்பாய்வு

டிப்ளோமா கற்கைநெறி வருமானம் ரூபா 4,516,125 வினால் அதாவது நூற்றுக்கு 89.54 இனாலும், விசேட செயற்திட்ட வருமானம் ரூபா 2,513,884 வினால் அதாவது நூற்றுக்கு 51.08 வினாலும் குறைவடைந்திருந்ததுடன், மனிதவள அபிவிருத்திச் செலவு ரூபா 21,342,105 வினால் அதாவது நூற்றுக்கு 81.80 வினால் குறைந்திருந்தது. அதற்கு பிரதான காரணம் மீளாய்வாண்டிலே பயிற்சி வேலைத்திட்டங்கள் இடம்பெறுதல் மிகவும் குறைந்த அளவில் இடம்பெற்றமையாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி கற்கைநெறிக்காக 2020 ஆம் ஆண்டிற்காக 72 பெயர்களை உள்ளடக்கிய வளப்பங்களிப்பு பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. வளப்பங்களிப்பு பட்டியலை தயாரிக்கும் போது வளப்பங்களிப்பு நபர்களை அடையாளங் கண்டு கொள்வதற்காக பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வளப் பங்களிப்பு பெயர் பட்டியலுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தைப பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் வருடாந்த வளப் பங்களிப்பு பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கும் வளப்பங்களிப்பு பட்டியலொன்று பேணப்பட்டு வந்திருந்ததுடன் வேலைத்திட்ட உத்தியோகத்தரும் வளப் பங்காளியாக செயற்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. வளப் பங்காளியாக சேவையை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையாக தெரிவு செய்யப்பட்ட வளப் பங்களிப்பாளர்களின் பயிற்சி வேலைத் திட்டங்கள் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொடுக்க முடியுமான தகைமையுள்ள வேலைத்திட்ட உத்தியோகத்தராக இருந்தாலும் அவரையும் வளப் பங்களிப்பு பட்டியலுக்கு உள்ளடக்குவதற்கு பொருத்தமான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பயிற்சி வேலைத்திட்டங்களை தெரிவு செய்யும் போது முறையானநடைமுறை ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இலக்குக்கு உரித்தான குழுவிற்கு மேலதிகமாக உரித்தல்லாத உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர். பயிற்சி தேவைப்பாட்டை அடையாளங் காண்பதோடு தேவைப்பாட்டை உடைய உத்தியோகத்தர்களை பங்கு பற்றச் செய்வதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்று இல்லாததன் காரணமாக உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் ஒரே குழுவெவ்வேறு பயிற்சி வேலைத்திட்டங்களில் பங்குபற்றியுள்ளமை சாதாரணமாக காணக்கூடியதாக இருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலக்குக்கு உரித்தான குழுக்களுக்கு பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக முறையான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பயிற்சி நிறுவனமொன்றான இந்த நிறுவனத்தின் ஏற்பாட்டு குறிப்புக்கள் அந்த நோக்கத்திற்கு இணங்கக் கூடிய வகையில் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பதவியணியினரை மீள் கட்டமைப்பு செய்வதற்கான புதிய பதவிகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து செல்லும் வகையில் முறையான ஏற்பாட்டு | புதிய பதவிகளில் பிரச்சினைகளுக்குரிய நிலைமையை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் மூலம் தீர்த்துக் கொண்டு அதன் பின்னர் அதிகாரங்கள் பகிர்ந்து செல்லும் வகையில் முறையான ஏற்பாட்டுத் திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. | பதவிகளின் அதிகாரங்கள் பகிர்ந்து செல்லும் வகையில் முறையான ஏற்பாட்டுக் குறிப்பொன்று திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆலோசகராக (பௌதீக திட்டங்கள்) நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர், உள்ளூராட்சி நிறுவனங்களின் பௌதீக திட்டங்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை அடையாளங் காணுதல், திட்டமிடுதல், ஏற்பாடு, இணைப்பு மற்றும் சட்டம் மற்றும் தொழில்நுட்ப விடயங்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற விடயங்களை நிறைவேற்ற வேண்டிய போதிலும் வேலைத்திட்ட உத்தியோகத்தரின் வேலைகளுக்கு மேலதிகமாக எதுவும் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | வேலைத்திட்ட உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதிருந்ததுடன் அந்த வேலையும் ஆலோசகர் சேவை 2 உம் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உத்தியோகத்தருக்கு கடமைகளை பொறுப்பளித்தல் மற்றும் அது தொடர்பான செயலாற்றல் பரிசோதிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் வேலைத்திட்ட உத்தியோகத்தர்கள் தவிர்ந்த பதவியணியினரின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு முறையான வகையில் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் கடமைக் கடிதத்தின் ஊடாக கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள துடன் ஏனைய உத்தியோகத்தர் களுக்காக எதிர்காலத்தில் அந்த நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக உத்தியோகத்தர் களுக்கு கடமைகள் பொறுப்பளிக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்காக 4 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டிலே விலைமனு கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்து ரூபா 53,196,907 வுக்கு | புதிய கட்டிட நிர்மாணிப்பு சம்பந்தமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சின்ஊடாக அமைச்சரவை பத்திரமொன்று | நிறுவனத்தின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை பரிசோதித்துப் பார்த்து அரசிற்கு நட்டமொன்று |

| | | |
|---|---|---|
| ஒப்பந்த உடன்படிக்கைக்கு முற்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் பயில் அத்திவாரத்தை நிர்மாணிப்பதற்கு பிரதான ஒப்பந்தக் காரரினால் உப ஒப்பந்தக் காரரொருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. 4 மாடிகளுக்கு போதுமான பயில் அத்திவாரம் நிர்மாணிக்கப்பட்டு அது 8 மாடிகள் வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு திட்டம் மாற்றப்பட்டதன் காரணமாக உரிய பயில் அத்திவாரத்தில் கட்டிடம் நிர்மாணிப்பது பொருத்தமற்றதாக நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதனால் இதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 44,757,072 ஆக செலவு விளைவற்ற செலவாக காணப்பட்டது. | அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சென்ற செலவுகள் தொடர்பாக தேடிப் பார்ப்பதற்கு தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள துடன், மேற்கொள்ளப்படவுள்ள நிர்மாண வேலைகள் தொடர்பாக மொறட்டுவை பல்கலைக் கழகத்துடன் கலந்துரையாடப்பட்டு கொண்டிருக்கின்றன. | ஏற்படாத வகையில் எதிர்வரும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதவியணியினரை மீள் கட்டமைப்பு செய்ததன் மூலம் ஏற்பட்ட புதிய பதவிகளுக்காக பதவியணியினரை இணைத்துக் கொள்வதற்கான மற்றும் ஆட் சேர்ப்பதற்குரியதான ஆட்சேர்ப்பு முறைமையை திருத்துவதற்கான நடவடிக்கைகள் 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. | புதிய பதவிகளாக உருவாக்கப்பட்ட பதவிகளுக்காக எந்த சம்பளத் தொகுதிக்கு உரிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவற்றதாக உள்ளதுடன் இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வினவப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானம் கிடைக்கும் வரை ஆட்சேர்ப்பு முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வது முடியாதுள்ளது. | திருத்தங்கள் துரிதமாக முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தாபனக் கோவையின் 11 ஆவது பந்தியின் 15.1 (IX) மற்றும் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு முறைமையின் 4 ஆவது பிரிவு குறித்த தினத்தில் தடைத் தாண்டல் பரீட்சை இடம்பெறாத காரணத்தால் உத்தியோகத்தரின் சேவையை நிரந்தரமாக்குதல் மற்றும் பதவி உயர்த்துதல் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்கான தேவையான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுள்ளது. | தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தன் படி குறித்த தினத்தில் தடைத் தாண்டல் பரீட்சையை நடாத்துவதற்கு மற்றும் முறையாக உத்தியோகத்தர் களின் சேவையை நிரந்தரமாக்குதல் மற்றும் பதவி உயர்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பணிப்பாளரினால் திறைசேரியினால் நியமிக்கப்பட்டிருந்த சம்பளக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளாமல் HM 2-2 சம்பள தொகுதியின் 10 ஆவது சம்பளப்படியான ரூபா 114,645 மாதாந்த சம்பளமொன்றை பெற்றிருந்ததால் 2020 பெப்ரவரியில் இருந்து 2021 ஆகஸ்ட் வரை ரூபா 513,000 தொகையொன்று கூடுதலாக பெறப்பட்டிருந்தது. | பரீட்சித்துப் பார்த்து சரி செய்யப்பட வேண்டியிருந்தால் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிட்டு சரியான சம்பளப் படியில் வைக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 இன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பந்தியின் பிரகாரம், கணக்கீட்டு வருடம் நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2021 யூன் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டுச் சபை கூடுவதற்கு முடியாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு தாமதமானது. | குறித்த தினத்தில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01/2014 ஆம் இலக்க மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றுநிருப நியமங்களின் பிரகாரம் நீண்டகால இலக்குடனான நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்கான இலக்கை உடைய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட, முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் அந்த செயற்பாடுகளின் எதிர்பார்ப்பு வெளியீடுகள் / பெறுபேற்றை உள்ளடக்கிய வகையில் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது. | குறிப்பிடப்பட்டுள்ள தன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் அரசின் அனைத்து வரையறுக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினால் குறித்த நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு முன்னர் பாதீட்டுப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பதிவேட்டிற்கான கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு வரையறைகளின்றி நிறுவனத்தினால் செலவுகளை ஏற்பதற்கு நேர்ந்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே | எதிர்காலத்தில் சரியான பாதீட்டு பதிவேடொன்று சமர்ப்பிக்கப்படும். | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

கட்டுப்பாட்டு சபையினால் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பதிவேடொன்று அங்கீகரிக்கப்படாதது சம்பந்தமாக நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் PED 01/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 9 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு A யின் மீது கட்டுப்பாட்டு சபையின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சுற்றுச்சூழல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்திற்கு உரிய சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புக்கள் அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறிப்பிடப்பட்டுள்ள தன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.5 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம் சம்பந்தமாக 2030 வருட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக உள்ளூராட்சி தொடர்பாக இலங்கை நிறுவனத்தினால் அறியப் பெற்றிருக்காததன் காரணமாக அந்த விடயங்கள் சம்பந்தமாக நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை நோக்கி அண்மிக்க வேண்டிய திருப்பு முனையும் இலக்கை நோக்கி அண்மிப்பதை அளவிடுவதற்கான குறிகாட்டியையும் அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |